


நிகழ்வு பற்றி கருத்துகள் பகிர

நிகழ்வில் பங்கேற்க

# வாங்க கதைக்கலாம்

**மாதாந்திர கலந்துரையாடல் நிகழ்வு**

அறச் சிந்தனைகளையும் வாசிப்பையும் வளர்த்தெடுக்கும் முயற்சியாக நாம் நடத்தி வரும் மாதாந்திர இலக்கிய நிகழ்வான " வாங்க கதைக்கலாம் " இம்மாதத்தில் அதன் **வெள்ளி விழா (25வது)** நிகழ்வை நடத்தவிருக்கிறது. இதன் வெற்றியில் தங்களின் பங்களிப்பை நன்றியுடன் பாராட்டுகிறோம். அறத்தையும் மனிதத்தையும் போற்றும் வகையில் பட்டறிவு பதிப்பகம் மற்றும் மனிதநேய அறக்கட்டளை இணைந்து மாதாந்திர " முழு நிலா " நிகழ்வுடன் இந்தக் கூடுகை நடத்தப்படுகிறது

கூடுகை : 25
தேதி : **15.04.2025 (செவ்வாய்கிழமை)**
நேரம் : மாலை 04:00 மணி
முறை : நேரிலும் இணைய வழியிலும்
இடம் : தானம் அறக்கட்டளை, மதுரை (தரைத்தளம்)

<u>சிறுகதை</u>

**சுனில் கிருஷ்ணன் அவர்களின் "இமாம் பசந்த்" குறித்து இலக்குமி காந்தன்**



இந்த நிகழ்வில்
**" அம்புப் படுக்கை "** சிறுகதைத் தொகுப்புக்காக 2018 ஆம் ஆண்டு **சாகித்திய அகாதமி யுவ புரஸ்கார் விருது** பெற்ற எழுத்தாளரும், ஆயுர்வேத மருத்துவருமான, **திரு. சுனில் கிருஷ்ணன்** அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார்.

" அனைவரும் நிகழ்வில் நேரில் அல்லது இணையவழியில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் "

## நிகழ்வின் நோக்கம்

- சிறுகதைகள் மூலமாக வாசிப்புப் பழக்கங்களை ஊக்குவிப்பது.
- அறம் சார்ந்த சிந்தனைகளை வளர்த்தெடுப்பதற்காக.
- சமூக சூழலில் ஒன்றாக பணிபுரியும் (அ) வாழும் நபர்கள் ஒருவருக்கு ஒருவர் புரிந்துக் கொள்ள கலந்துரையாடல்களை ஊக்குவிப்பதற்காக.
- இலக்கியத்தை அனைவரிடத்திலும் முக்கியமாக இளைஞர்களிடத்தில் இயல்பாக்குவதற்காக.
- கதைச் சொல்லிகளை உருவாக்குவதற்காக.
- சமூகம் சார்ந்த கதைகளை எடுத்து தற்கால சமூகத்துடன் இணைத்து புரிந்துக் கொள்வதற்காக.

## கதைகள்,எழுத்தாளர்கள்

இந்த நிகழ்வில் இதுவரை **34 எழுத்தாளர்களின் 49 கதைகளை** எடுத்து கலந்துரையாடி உள்ளோம். முதல் மாதம் மட்டும் மூன்று கதைகள் எனவும் பின்பு மாதம் இரண்டு கதைகள் என இணைய பொதுவெளியில் அனைவருக்கும் கிடைக்கும் கதைகளை எடுத்து கலந்துரையாடி உள்ளோம். முதல் ஐந்து மாதங்கள் நமது மண் வாசம் இதழில் உள்ள சிறுகதைகளையும் எடுத்து கலந்துரையாடினோம். பின்பு, அதற்கு தனி கவனம் தேவை என இணைக் கதைகளை மட்டும் எடுத்துக் கொண்டோம்.

கதைகள் **சமூகம், குடும்பம், குழந்தைகள், பெண், வலராறு, வாழ்வியல்** என பல மையக்கருவில் உள்ள கதைகளை எடுத்துக் கொண்டுள்ளோம்.

## கதைச் சொல்லிகள்

இந்த நிகழ்விற்கு இதுவரை நாம் **49 கதைகளை கூற நாம் 49 கதைச் சொல்லிகளை** அழைத்து கதைச் சொல்ல கூறியுள்ளோம். 18 பெண் கதைச் சொல்லிகளும், 31 ஆண் கதைச் சொல்லிகளும் இயல்பாக இடம் பெற்றுள்ளார்கள்.

## பங்கேற்பாளர்கள்

**நேரடியாகவும் இணைய வழியிலும்**, ஆர்வமுள்ள பொது மக்கள், களப் பணியாளர்கள் கலந்துக் கொண்டுள்ளார்கள். மேலும், இந்த நிகழ்வு பற்றி அறிந்துக் கொள்ள, இதே போலக் களத்தில் நடக்க ஒவ்வொரு மாதமும் ஒரு மண்டல அணியினரை அழைத்தோம். அதன்படி இதுவரை தமிழ்நாட்டில் உள்ள **15 மண்டலங்களில்** உள்ள பணியாளர்கள் தலைவர்கள் கலந்துக் கொண்டு தங்களின் கருத்துகளை பகிர்ந்துள்ளனர்.



இம்மாதத்தில் " வாங்க கதைக்கலாம் " **வெள்ளி விழா (25வது)** நிகழ்வு நடைபெற்றது

கதைச் சொல்லி : **திரு. இலக்குமி காந்தன்**
கதை : "**இமாம் பசந்த்**"
எழுத்தாளர் : திரு. சுனில் கிருஷ்ணன்

தானம் அறக்கட்டளையின் நிர்வாக இயக்குனர் **திரு.மா.ப.வாசிமலை** அவர்கள் வாழ்த்துரையாற்றினார்

" **அம்புப் படுக்கை** " சிறுகதைத் தொகுப்புக்காக 2018 ஆம் ஆண்டு **சாகித்திய அகாதமி யுவ புரஸ்கார் விருது** பெற்ற எழுத்தாளரும், ஆயுர்வேத மருத்துவருமான, **திரு. சுனில் கிருஷ்ணன்** அவர்கள் நேரடியாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் .